தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(01.06.2022 முதல் 05.06.2022)

அறிக்கை எண்: 43/2022 தேதி :31.05.2022

## பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38 °செ முதல் 39 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 28 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (01.06.2022 முதல் 05.06.2022)

| கடந்த வார வானிலை (27.05.2022 முதல் 30.05.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (01.06.2022 முதல் 05.06.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 27/05 | நாள்-2 28/05 | நாள்-3 29/05 | நாள்-4 30/05 | தேதி | நாள்-1 01/06 | நாள்-2 02/06 | நாள்-3 03/06 | நாள்-4 04/06 | நாள்-5 05/06 |
| 0 | 7.8 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 4 | 2 | 0 |
| 39 | 39 | 38 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 38 | 38 | 37 | 39 |
| 27 | 27 | 28 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 28 | 27 | 27 | 28 |
| 5 | 4 | 6 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 3 | 5 | 4 | 3 |
| 66-38 | 60-38 | 61-49 | 62-40 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65-45 | 65-45 | 65-45 | 65-45 | 65-45 |
| 19 | 22 | 27 | 12 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 6 | 6 | 6 | 6 | 6 |
| மேற்கு வட மேற்கு | மேற்கு வட மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## பெரம்பலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 03.06.2022 மற்றும் 04.06.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37 °செ முதல் 39 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ முதல் 28 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| | குறுவை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும். |

| | | |
|---|---|---|
| நெல் | | குறுவை சாகுபடி மேற்கொள்ள இருக்கும் விவசாயிகள் நெல் விதைகளை கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும். |
| | | குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் ஆடுதுறை 47 விதைகளை விதைப்பு செய்வதற்கு முன்பு விதை நேர்த்தி செய்தபின் நாற்றாங்கால் அமைக்கவும். |
| கால்நடைகள் | மாடு | மாட்டுத் தொழுவத்திற்கு அலுமினியத்தாலான மேற்கூரை இடுவதால் கால் நடைகளுக்கு வெய்யிலின் தாக்கம் குறைக்கப்படுகிறது. |

**குறுஞ்செய்தி**

மாட்டுத் தொழுவத்திற்கு அலுமினியத்தாலான மேற்கூரை இடுவதால் கால் நடைகளுக்கு வெய்யிலின் தாக்கம் குறைக்கப்படுகிறது.

**இயக்குநர்**